TAMILTH Kancheepuram 1 Regional_02 213601
© 2006-2017 Kasturi & Sons Ltd. -Visalam S -visalam.s@thehindutamil.co.in -9444210177

▲ அனுமன் ஜெயந்தியை முன்னிட்டு சென்னை நங்கநல்லூர் ஆஞ்சநேயர் கோயிலில் சுவாமியை தரிசிக்க நீண்ட வரிசையில் காத்திருந்த பக்தர்கள். (அடுத்த படம்) சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு காட்சி அளித்த ஆஞ்சநேயர். படங்கள்: எம்.முத்துகணேஷ்

▲ அசோக் நகரில் 5,008 லட்டுகள் மூலம் அலங்காரம் செய்யப்பட்ட ஆஞ்சநேயர்.(அடுத்த படம்) அசோக் நகர் சாமியார் தோட்டம் திரிபுரசுந்தரி கோயிலில் உள்ள வீர ஆஞ்சநேயருக்கு ஒரு லட்சத்து எட்டு வடைகளால் உருவான வடை மாலை சாற்றப்பட்டது. படங்கள்: ம.பிரபு

▲ மறைந்த முன்னாள் பிரதமர் வாஜ்பாயின் 95-வது பிறந்தநாள் சென்னை தி.நகரில் உள்ள பாஜக தலைமை அலுவலகத்தில் நேற்று கொண்டாடப்பட்டது. இதில், வாஜ்பாயின் உருவப்படத்துக்கு பாஜக மூத்த தலைவர்கள் இல.கணேசன், சிபி.ராதாகிருஷ்ணன், தமிழக முன்னாள் அமைச்சர் எச்.வி.ஹண்டே உள்ளிட்ட நிர்வாகிகள் மலர் தூவி மரியாதை செலுத்தினர். படம்: ம.பிரபு

கேங்மேன் பணி மின் வாரியம் எச்சரிக்கை

■ சென்னை

கேங்மேன் பணி நியமனங்களுக்கு விண்ணப்பதாரர்கள் யாரிடமும் பணம் கொடுத்து ஏமாற வேண்டாம் என மின்வாரியம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு மின்வாரியத்தில் புதிதாக, 5 ஆயிரம் கேங்மேன் பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன. இதற்கிடையே, பணம் கொடுத்தால் வேலை வாங்கித் தருவதாகக் கூறி சிலர் மோசடியில் ஈடுபடுவதாக புகார்கள் வந்துள்ளன.

இதுகுறித்து, மின்வாரிய அதிகாரிகள் கூறும்போது, "கேங்மேன் பணிக்கு ஆட்களை தேர்வு செய்யும் நடைமுறை வெளிப்படைத் தன்மையுடனும் நியாயமான முறையிலும் நடத்தப்பட்டு வருகிறது. எனவே, இப்பணிக்கு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் யாரிடமும் பணம் கொடுத்து ஏமாற வேண்டாம்" என்றனர்.

சாஸ்த்ரா - ராமானுஜன் விருதுக்கு ராயல் சொசைட்டி அங்கீகாரம்

● இங்கிலாந்து பேராசிரியருக்கு விருது, சான்றிதழ்

■ சென்னை

சாஸ்த்ரா - ராமானுஜன் விருது இங்கிலாந்தில் உள்ள ராயல் சொசைட்டியின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. ராமானுஜன் எ°ப்.ஆர்.எஸ். (°பெல்லோ ஆ°ப் த ராயல் சொசைட்டி) ஆக தேர்ந்தெடுக்கப்பட்டு 100 ஆண்டுகள் நிறைவு பெற்றதைக் கொண்டாடும் வகையில் 'ராமானுஜனின் மரபு: சாஸ்த்ரா விருது பெற்றவர்களின் பணி' என்ற தலைப்பில் ஓர் ஆய்வுக் கட்டுரையை இந்த மாதத்தில் ராயல் சொசைட்டி வெளியிட்டது.

2019-ம் ஆண்டுக்கான விருது நிகழ்கதவு எண் கோட்பாட்டுக்கான சிறந்த பங்களிப்புக்காக வார்விக் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆடம் ஹார்ப்பருக்கு வழங்கப்பட்டது.

கும்பகோணத்தில் உள்ள சாஸ்த்ரா பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற விருது வழங்கும் விழாவில் அமெரிக்க கணித சங்கத்தின் துணைத் தலைவர் பேராசிரியர் கென் ஓனோ, ஆடம் ஹார்ப்பருக்கு 10,000 அமெரிக்க டாலர் ரொக்கப் பரிசையும் விருது சான்றிதழையும் வழங்கினார். நிகழ்ச்சியில் அவர் பேசும்போது, "ஹார்ப்பர், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் பென் கிரீனிடம் தனது பி.எச்டி ஆய்வை மேற்கொண்டார். 2007-ல் இந்த விருதை கிரீன் பெற்றுள்ளார். அதேபோல 2005-ல் கண்ணன் சவுந்தரராஜன் இந்த விருதைப் பெற்றார். அவரது மாணவர் 2017-ல் இந்த விருதைப் பெற்றார்" என்றார்.

இதுகுறித்து °ப்ளோரிடா பல்கலைக்கழகத்தின் கணிதவியல் துறைத் தலைவரும் சாஸ்த்ரா ராமானுஜன் விருதுக் குழுவின் தலைவருமான பேராசிரியர் கிருஷ்ணசாமி அல்லாடி கூறும்போது, "ஐசக் நியூட்டனின் தொடக்க கால ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்ட பத்திரிகை, சாஸ்த்ரா ராமானுஜன் விருது பெற்றவர்களைப் பற்றிய ஓர் ஆய்வு கட்டுரையை வெளியிட்டதன் மூலமே, இந்த விருதின் சிறப்பு அனைவருக்கும் உறுதிபட தெரிகிறது.

இந்த விருது உலகளாவிய பெயரைப் பெற்றுள்ளது. இதற்கு முன்னர் இந்த விருது பெற்றவர்களில் நால்வர் பீல்ட்ஸ் பதக்கம் வென்றுள்ளனர்" என்றார். ●

▶▶ கும்பகோணத்தில் உள்ள சாஸ்த்ரா பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற 'சாஸ்த்ரா – ராமானுஜன்' விருது வழங்கும் விழாவில் அமெரிக்க கணித சங்கத்தின் துணைத் தலைவர் பேராசிரியர் கென் ஓனோ, வார்விக் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆடம் ஹார்ப்பருக்கு 10,000 அமெரிக்க டாலர் ரொக்கப் பரிசையும் விருது சான்றிதழையும் வழங்கினார். உடன் சாஸ்த்ரா பல்கலைக்கழக டீன் வி.ராமசாமி, சாஸ்த்ரா பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ்.வைத்ய சுப்பிரமணியம், °ப்ளோரிடா பல்கலைக்கழக கணிதத் துறை தலைவர் பேராசிரியர் கிருஷ்ணசாமி அல்லாடி.

சென்னை சுற்றுலா பொருட்காட்சியில்

ரூ.50-க்கு 14 வகை மருத்துவ பரிசோதனை

■ சென்னை

சென்னை தீவுத்திடலில் நடைபெறும் சுற்றுலா பொருட்காட்சியில் ரூ.50-க்கு 14 நிமிடத்தில் 14 வகையான மருத்துவப் பரிசோதனைகள் செய்யப்படுகின்றன.

சென்னை தீவுத்திடலில் தமிழக அரசு சுற்றுலா மற்றும் வர்த்தகக் கண்காட்சி நடைபெற்று வருகிறது. இக்கண்காட்சியில் சுகாதாரத் துறை சார்பில் மருத்துவக் கல்வி இயக்ககம், தொழுநோய், காசநோய் தடுப்புத் துறை, உறுப்புதான ஆணையம், பொது சுகாதாரத் துறை, புகையிலைத் தடுப்புத் துறை, பாரம்பரிய மருத்துவத் துறை உள்ளிட்டவற்றின் அரங்குகள் தனித்தனியாக இடம் பெற்றுள்ளன. முக்கியமாக அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவ மனை சார்பில் அமைக்கப்பட்டுள்ள 'அம்மா முழு உடல் பரிசோதனை மையம்' அரங்கில் ரூ.50-க்கு 14 நிமிடத்தில் 14 வகையான பரிசோதனைகள் செய்யப்படுவது பொதுமக்களை கவர்ந்துள்ளது.

14 நிமிடத்தில்..

இதுதொடர்பாக அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவ மனை ஒருங்கிணைப்பு அதிகாரி டாக்டர் ஆனந்த்குமார் கூறிய தாவது: அம்மா முழு உடல் பரிசோதனை மையம் அரங்கில் குறைந்த கட்டணத்தில் மருத்துவப் பரிசோதனைகள் செய்யப்படுகின்றன. ரூ.50 கட்டணத்தில் ரத்த அணுக்களின் அளவு, ரத்த சர்க்கரை அளவு ஆகியவை ரத்த மாதிரிகளைக் கொண்டு பரிசோதிக்கப்படுகின்றன.

அவற்றுடன் சேர்த்து உடல் எடை, உயரம், பருமன் அளவீடு, பார்வைத் திறன், உடல் இயக்க அளவு, ரத்த அழுத்தம், நாடித் துடிப்பு, ஆக்சிஜன் அளவு உள்ளிட்டவை ஒரே சாதனத்தின் வாயிலாக பரிசோதிக்கப்படும்.

உடலில் உள்ள அனைத்து பகுதிகளிலும் உள்ள ரத்த ஓட்டத்தின் அளவீடுகள் மற்றொரு சாதனத்தின் வாயிலாக பரிசோதிக்கப்படும். மொத்தத்தில் 14 வகையான பரிசோதனைகள் 14 நிமிடத்தில் செய்யப்பட்டு முடிவுகள் உடனுக்குடன் வழங்கப்படுகிறது.

தேவைப்பட்டால் இசிஜி பரிசோதனை இலவசமாக செய்யப்படுகிறது. பரிசோதனை முடிவுகளுடன் உடனடியாக டாக்டரை சந்தித்து ஆலோசனை பெறலாம். பரிசோதனை செய்யப்படும் கருவிகள் அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இவைதவிர ரூ.200 கட்டணத்தில் மூன்று மாத சர்க்கரை அளவு பரிசோதனை செய்யப்பட்டு உடனடியாக முடிவுகள் கொடுக்கப்படுகின்றன.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

▶▶ ராம்கோ சிமென்ட்ஸ் நிறுவனத்தின் அரியலூர் ஆலைக்கு 2018-19-ம் ஆண்டுக்கான இந்திய தொழில் துறை கூட்டமைப்பின் தென் பிராந்திய சுற்றுச்சூழல், சுகாதாரம், பாதுகாப்பு சிறப்பு விருது கிடைத்துள்ளது. விருது வழங்கும் அமைப்பின் தலைவர் ஸ்ரீநி ஸ்ரீநிவாசன் விருதை வழங்க ராம்கோ சிமென்ட்ஸ் அரியலூர் ஆலை துணைத் தலைவர் (நிர்வாகம்) எஸ்.ராமராஜ் பெற்றுக்கொண்டார்.

டீக்கடையில் கேட்பாரற்று கிடந்த

ரூ.3.5 லட்சத்தை போலீஸில் ஒப்படைத்த வியாபாரி

● காவல் ஆணையர் ஏ.கே.விஸ்வநாதன் பாராட்டு

■ சென்னை

டீக்கடையில் கேட்பாரற்று கிடந்த ரூ.3.50 லட்சத்தை காவல் நிலையத்தில் ஒப்படைத்த வியாபாரியை போலீஸார் பாராட்டினர்.

சென்னை ஏழுகிணறு, முதலியார் தெருவைச் சேர்ந்தவர் கோட்டமுத்து. இவர், பாரிமுனை அருகே 2-வது கடற்கரை சாலையில் செல்போன் கடை வைத்துள்ளார். நேற்று முன்தினம் மாலை, 3,50,000 பணத்தை கைபையில் எடுத்துக்கொண்டு டீக்கடைக்கு சென்றுள்ளார். டீ குடித்த பின்னர், அங்கேயே பணப்பையை மறந்து விட்டுச் சென்றுள்ளார்.

சிறிது நேரத்துக்கு பிறகு பணம் தவறவிட்டது நினைவுக்கு வந்தது. இதையடுத்து, சம்பந்தப்பட்ட டீக்கடை சென்று பார்த்துள்ளார். அங்கு பணப்பை காணாததைக் கண்டு திடுக்கிட்டுள்ளார். இதுகுறித்து வடக்கு கடற்கரை காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீஸார் விசாரணை நடத்திக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு இரண்டாவது கடற்கரை சாலையில் பூட்டு, சாவி பழுதுபார்க்கும் கடை நடத்தும் ரமேஷ், அவரது உறவினர் கருணாகரன் ஆகியோர் காவல்நிலையம் வந்து, அந்த பணப்பையை போலீஸாரிடம் ஒப்படைத்தனர்.

டீ குடிக்கச் சென்றபோது, ரூ.3.5 லட்சம் கேட்பாரற்று கிடந்ததாக அப்போது அவர்கள் போலீஸாரிடம் தெரிவித்தனர், இதையடுத்து நேர்மையாக நடந்து கொண்ட ரமேஷ், கருணா கரன் இருவருக்கும் காவல் ஆணையர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

அரசியல் கட்சிகள், சங்கங்கள், சமூக அமைப்புகள், மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் தங்களது செய்தி, நிகழ்ச்சிகளை மின்னஞ்சலில் அனுப்பலாம். மின்னஞ்சல் முகவரி: press.release@hindutamil.co.in

இந்து தமிழ் திசை
சந்தாதாரர் ஆக வேண்டுமா?
எங்கள் முகவர் உங்களைத் தொடர்புகொள்ள குறுஞ்செய்தி: HTS<ஸ்பேஸ்> உங்கள் பின்கோடு இதை டைப் செய்து 9773001174 என்னுக்கு அனுப்பவும்.
மின்னஞ்சல்: circ@hindutamil.in
டிசம்பர் மாதச் சந்தா – ரூ.217, ஆண்டுச் சந்தா – ரூ.2,527

இந்து தமிழ் திசை
பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித்தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.
படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்டப் பகுதிகளில்

தேவாலயங்களில் கிறிஸ்துமஸ் பண்டிகை சிறப்பு பிரார்த்தனை

■ காஞ்சிபுரம்/திருவள்ளூர்

திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்ட பகுதிகளில் கிறிஸ்தவ தேவாலயங்களில் கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு சிறப்பு பிரார்த்தனை நடைபெற்றது.

காஞ்சிபுரம் தூய இருதய அன்னை ஆலயம், செங்கல்பட்டு தென்னிந்திய திருச்சபை, தமிழ்நாடு லூத்ரன் திருச்சபை, கத்தோலிக்க பேராலயம், பெந்தகொஸ்தே சபை ஆகிய இடங்களில் சிறப்பு பிரார்த்தனை நடைபெற்றது.

அச்சிறுப்பாக்கம் மழைமலை மாதா தேவாலயத்தில் கிறிஸ்துமலை ஒட்டி இயேசு கிறிஸ்துவின் பல்வேறு உருவங்கள், மேரி மாதா, கீற்றுக் கொட்டகையில் குழந்தை இயேசு உள்ளிட்ட பலவகை உருவங்களை தாங்கிய பொம்மைகள் காட்சிகளாக வைக்கப்பட்டிருந்தன.

செங்கல்பட்டில் ஆராதனை

செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரம், கேளம்பாக்கம், கோவளம், கல்பாக்கம் பகுதிகளில் உள்ள தேவாலயங்களில் கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு சிறப்பு பிரார்த்தனை நடைபெற்றது.

கேளம்பாக்கத்தில் தூய கிறிஸ்து மீட்பர் தேவாலயத்தில் ஆலய போதகர் ஸ்டீபன் தலைமையில் நடைபெற்ற திருப்பலியில் பலர் பிரார்த்தனையில் ஈடுபட்டனர். புதுப்பட்டினம், கல்பாக்கம் பகுதி தேவாலயங்களில் லூர்தரன், காணான் திருச்சபை சார்பில் நள்ளிரவு முதலே சிறப்பு பிரார்த்தனை கூட்டங்கள் நடைபெற்றன. மேலும், ஏழை எளிய முதியோர்களுக்கு வேட்டி, சேலைகள் வழங்கப்பட்டன.

சிறுதாவூரில் உள்ள ஜெபமே ஜெயம் தேவாலயத்தில் மரக்கன்றுகள் நடும் விழா நடைபெற்றது. திருக்கழுக்குன்றம் தேவாலயத்தில் முதியோர்களுக்கு நலத்திட்ட உதவிகள், மருத்துவ முகாம்கள் நடைபெற்றன.

திருவள்ளூர் மாவட்டத்தில்..

திருவள்ளூர், திருத்தணி, பள்ளிப்பட்டு, பூந்தமல்லி, பொன்னேரி, கும்மிடிப்பூண்டி என பல பகுதிகளில் கிறிஸ்துமஸ் விழா கொண்டாடப்பட்டது.

திருவள்ளூர் புனித பிரான்சிஸ் சலோசியர் தேவாலயம், திருத்தணி சி.எஸ்.ஐ. தேவாலயம், பழவேற்காடு புனித மகிமை மாதா தேவாலயம், கும்மிடிப்பூண்டி புனித பால் தேவாலயம், ஆரம்பாக்கம் வான தூதர்கள் அன்னை தேவாலயம், ஆவடி புனித பால் தேவாலயம் மற்றும் புனித அந்தோணியார் உள்ளிட்ட தேவாலயங்களில் நேற்று முன்தினம் இரவு முதல் விடிய விடிய சிறப்பு பிரார்த்தனை, திருப்பலி நடைபெற்றன. இதில் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

▲ அச்சிறுப்பாக்கம் மழைமலை மாதா தேவாலயத்தில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் விழா. (அடுத்த படம்) கேளம்பாக்கம் தேவாலயத்தில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் சிறப்பு வழிபாடு.

வரி விளம்பரங்கள்

தொழில்
டீலர்கள் தேவை
55 INCHES LED TV 1+1 ஆ / பெ
Online டெலிவரி ஏஜெண்ட் வாரம் ரூ.20,000. Ct: 8940427996

பொது
சுற்றுலா
தினசரி திருப்பதி / ஷிரடி தர்சன்
Kerala, Goa, Singapore Packages.
Sri Balaji 9884053380

6 ஷீரடி-ஜன.12,26 பண்டரிபுரம், மந்திராலயம் பிப். 9, 23, மார்ச் 8, 15, 22, 29, ஏப். 5, 12, 19, 26
8 நாள் காசி, அலகாபாத் கயா - மார்ச்.2,16,30, ஏப்.6,13,2027
11 நாள் காசி, கயா-மார்ச் 20 டெல்லி, ஆக்ரா-ஏப். 17, மே 1, 11, 22
16 நாள் நேபாள், முக்தினாத், காசி மார்ச் 15, ஏப். 5, 19, 26, மே 3, 10, 17, 24, 31
11 நாள் கேங்டாக், டார்ஜிலிங் ஏப்.8,15,22,29, மே 6,13,20,27
15 நாள் பஞ்சுவாரகா மார்ச்10 | 10 நாள் அந்தீரா-பிப்.6
13 நாள் ராஜஸ்தான்-பிப்.11
14 நாள் நவஜோதிலிங்கம்-பிப்.9
16 பத்ரிநாத், கேதார்நாத் மே 3,12,18,27, ஜூன் 2,11
7 நாள் கேரளா (BOAT HOUSE) - பிப்.3
9 நாள் இலங்கை 4 நாள் துபாய்
6 நாள் சிங்கப்பூர், மலேசியா
5 நாள் அந்தமான் 4 நாள் கோவா
10 + 1 PERSON FREE
SRINIVASA TOUR
9710025326

பொது
சுற்றுலா
Summer Super Saver Plan Offer
Apr. & May 5000 Discount
Foreign Tour
6 மலேசியா-சிங்கப்பூர்
4 பாங்காக்-பட்டாயா
4 துபாய்-அபுதாபி
5 ஸ்ரீலங்கா
மேலும் 30 சுற்றுலாக்கள்
தனி குரூப் சுற்றுலாக்கள்
ஸ்ரீ முருகன் டிராவல் ஏஜென்சி
98421 17415
98421 17470

பொது அறிவிப்பு
PUBLIC NOTICE
I, Kanak Varma, w/o RC Varma, R/o 142 d pocket c Siddharth extension New Delhi 110014, state that share certificate for 350 shares, folio no. 31783 issued by Ashok Leyland is lost.
Contact : 9868149170

எமது பதிப்புகள்: சென்னை, காஞ்சிபுரம், புதுவை, வேலூர், கோவை, திருப்பூர், சேலம் தருமபுரி, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, கன்னியாகுமரி

Published by N. Ravi at Kasturi Buildings, 859 & 860, Anna Salai, Chennai-600002 on behalf of KSL MEDIA LIMITED, and Printed by D.Rajkumar at Plot B-6 & B-7, CMDA Industrial Complex, Maraimalai Nagar, Chengleput Taluk, Kancheepuram Dist., Pin: 603209. Editor: K. Asokan (Editor responsible for selection of news under the PRB Act).